# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**மனு எண்.1408/ஊராட்சி/2018**

**நாள்: 17/10/2018**

K. ஆனந்தன்,
கலந்திரா கிராமம்,
ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம். – மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

**ஆணை**

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், கலந்திரா கிராமத்தில் வசிக்கும் திரு. K. ஆனந்தன், அவருடைய 11.10.2018 நாளிட்ட மனுவில், அவருக்கு 24.9.2014 அன்று பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் உத்தரவு வழங்கியதாகவும், அதனடிப்படையில் 24.12.2014ல் வீட்டை கட்டி முடித்துவிட்டு அதற்கான தொகையை வழங்கும்படி கோரியதில், 7 மாதத்திற்கு பின் முதல் தவணையாக 22.7.2015 அன்று ரூ.86,750/– மட்டும் வழங்கப்பட்டது என்றும், மீதித் தொகை ரூ.93,250/– ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய அலுவலர் வழங்கவில்லை என்றும், இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிற்கு புகார் அனுப்பியும் இது நாள் வரையில் பாக்கித் தொகையை வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கவில்லையெனத் தெரிவித்து, அதனை உடனடியாக பெற்றுத்தரக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி “ஊராட்சி மன்றம்” மற்றும் “ஊராட்சி ஒன்றியம்” என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வழிவகையில்லை. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும், இப்பொருள் குறித்து, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

31/10/2018

செயலாளர்.

31.10.18

31/10/18

பெறுநர்

K. ஆனந்தன்,
த/பெ. காசி கவுண்டர்,
கலந்திரா கிராமம் & அஞ்சல்,
ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   வேலூர் மாவட்டம்,
   வேலூர். (இணைப்புகளுடன்).
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. முறைமன்ற நடுவர் செயலர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
4. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி).